Registered as a Newspaper · பக்கங்கள் 04 · விலை ரூபா 5-00

நல்லூர் பிரதேச நூலகம்
யாழ்ப்பாணம்


# ஈழநாதம்

THE EELANAATHAM · மக்களின் தினசரி · Peoples Daily

நாதம் 04 · திருவள்ளுவர் ஆண்டு 2024 · ஐப்பசி 29 · (14-11-93) · ஞாயிற்றுக்கிழமை · ஓசை 269


## பிரபாகரனின் படையணி விரைவில் கொழும்பு வரும்

''பிரபாகரனின் படை அணி இன்னும் சில வாரங்களில் கொழும்பு நோக்கிவந்தால் கூட நான் ஆச்சரியப்படப் போவதில்லை'' என சிறிலங்கா பாராளுமன்ற துணை சபாநாயகர் காமினி பொன்சேகா தெரிவித்துள்ளார். சிறிலங்கா பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இதனைதெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்; ''இன்று விடுதலைப்புலிகளுடன் போராடி யுத்தத்தில் வெற்றி கொள்ளக் கூடிய தலைவர் எவரும் இல்லை என்பதேஉண்மை. ''முழுமையாக யுத்தத்தை நடாத்தி பிரச்சினையைத் தீர்க்முடியாது என்பதை சகலரும் உணரவேண்டும். பிரச்சினைக்கான தீர்வை நோக்கிச் செல லும்போது அதைப் பற்றிமக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும் அது அரசாங்கத்தின் கடமையாகும். ''குறுகிய அரசயல்லாபம் கொண்டு இனப்பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம்தீர்வு காண

(4ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரி படைத் தளத்தை அழித்து விட்டு

# நேற்றுக்காலை புலிகள் வெளியேறினர்!

## தாக்குதல் இலக்கு நிறைவேறியது

(யாழ்ப்பாணம்)

**பூநகரி-நாகதேவன்துறை படைத்தளத்தை தாக்கி அழித்து விட்டு, அங்கு கைப்பற்றிய பெருந் தொகை இராணுவத் தளபாடங்களுடன் விடுதலைப்புலிகள் அங்கிருந்து நேற்றுக்காலை வெளியேறினர். தமிழ மக்களின் பேரக்த வரத் திற்குப் பெரும் இன்னல்களை விளைவித்து வந்த இத் தளத்தை தாக்கி அழித்ததின் மூலம் இத்தாக்குதல் நடவடிக்கை குறித்த விடுதலைப்புலிகளின் இலக்கு நிறைவேறியுள்ளது.**

கடந்த 11 ஆம தகதி அதி காலை 1.45 மணி அளவில் பூநகரி படைத்தளம் மீது பாரிய தாக்குதல் ஒன்றைத் தொடுத்த வீடுதலைப்புலிகள், ஏழு மணி நேரத்திற்குள் அம் முகாமைத் தமது பூரணகட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்திருந்தனர்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் உக்கிரத் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினரில் ஒரு பகுதியினர் முகாமிலிருந்து தப்பி ஓடினர்.

இதனைத் தொடர்ந்து கடந்த மூன்று நாட்களாக தப்பி ஓடிய இராணுவத்தினரைத் தேடும் பணியில் ஈடுபட்டிருந்த விடுதலைப புலிகள் நேற்றுக் காலையுடன் தமது பணியை முடித்துக்கொண்டு பூநகரிப் பகுதியிலிருந்து வெளியேறினர்

விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இத்தாக்குதலானது, பூநகரிப் படைத் தளத்தைத் தாக்கி அழிக்கும் நோக்கம் கொண்டதாக இருந்த அதே வேளை, அப்படைத் தளத்திலுள்ள இராணுவத் தளபாடங்களைக் கைப்பற்றுவதையும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## 600 படையினரைக் காணவில்லை

## பாதுகாப்பு அமைச்சு தகவல்

(கொழும்பு)

பூநகரி இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் சுமார் 600 இராணுவத்தினர் பலியாகியுள்ளதாக தெரியவருகிறது இந்த 600 பேரும் காணாமல் போயுள்ளதாக சிறிலங்கா அரசாங்கம் அறிவித்துள்ளது.

மேலும் 309 இராணுவத்தினர் மேற்படி தாக்குதலில் காயமடைந்துள்ளதாகவும் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட உயிர் மற்றும் ஆயுத இழப்பை சரிவரக் கணிப்பிட முடியவில்லை என சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்கா அறிவித்துள்ளார்.

மேலும் 42 இராணுவ சடலங்கள் அப்பகுதியிலிருந்து கண்டெடுக்கப்பட்டதாக தெரிவித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பூநகரிப ப.திக்கு

## 372 விடுதலைப் புலிகள்



தேசியத் தலைவர் பிரபாகரனுடன், பூநகரி முகாம் தகர்ப்பில் வீரச்சாவடைந்த முதற்கடற்கரும்புலி மேஜர் கணேஸ்

## பரீட்சை ஒத்திவைப்பு

நாளை நடைபெறவிருந்த யாழ் மாவட்டப் பாடசாலை

## பூநகரியில் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள்

தொடுத்த விடுதலைப்புலிகள், ஏழு மணி நேரத்திற்குள் அம் முகாமைத் தமது பூரண கட் டுப்பாட்டிற்குள் கொண்டுவந்

இராணுவத்தினரில் ஒரு பகுதி யினர் முகாமிலிருந்து தப்பி ஓடினர்.

இதனைத் தொடர்ந்து கட

காலையுடன் தமது பணியை முடித்துக்கொண்டு பூநகரிப் பகுதியிலிருந்து வெளியேறினர்

விடுதலைப் புலிகள் மேற்

வேளை, அப்படைத் தளத்தி லுள்ள இராணுவத் தளபாடங் களைக் கைப்பற்றுவதையும்

[4ஆம் பக்கம் பார்க்க)



தேசியத் தலைவர் பிரபாகரனுடன், பூநகரி முகாம் தகர்ப்பில் வீரச் சாவடைந்த முதற்கடற்கரும்புலி மேஜர் கணேஸ்

# 600 படையினரைக் காணவில்லை பாதுகாப்பு அமைச்சு தகவல்

(கொழும்பு)

பூநகரி இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற் கொண்ட தாக்குதலில் சுமார் 600 இராணுவத்தினர் பலி யாகியுள்ளதாக தெரியவருகி றது இந்த 600 பேரும் காணா மல் போயுள்ளதாக சிறிலங்கா அரசாங்கம் அறிவித்துள்ளது.

மேலும் 309 இராணுவத் தினர் மேற்படி தாக்குதலில் காயமடைந்துள்ளதாகவும் இராணுவத்தினருக்கு ஏற் பட்ட உயிர் மற்றும் ஆயுத இழப்பை சரிவரக் கணிப்பிட முடியவில்லை என சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செய லாளர் ஹமில்டன் வனசிங்கா அறிவித்துள்ளார்.

மேலும் 42 இராணுவ சட லங்கள் அப்பகுதியிலிருந்து கண்டெடுக்கப்பட்டதாக தெரி வித்த பாதுகாபபு அமைச்சின் செயலாளர் பூநகரிப்பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்ட மேலதிக படையினரால் மேலும் சட லங்களையும் காயமடைந்த மற்றும் தப்பி ஓடிய படையி னரையும் மீட்டெடுக்க முயற் சிகள் மேற்கொள்ளப்பட்டு

(4ஆம் பக்கம் பார்க்க)

# 372 விடுதலைப் புலிகள் இதுவரை வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

பூநகரி – நாகதேவன்துறை இராணுவ கடற்படை கூட்டுத் தளத்தின் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்கி அழிப்பு நடவடிக்கையின் போதும், அங்கிருந்து தப்பி ஓடிய படையினரை தேடி யழிக்கும் நடவடிக்கையின் போதும் 372 விடுதலைப் புலி கள் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

பூநகரி - நாகதேவன்துறை தளத்தின்மீது தாக்குதலை ஆரம்பித்த முதலாவது நாளா கிய 11-ம் திகதி 240 போராளி களும் இரண்டாவது நாளா கிய 12 ம் திகதி 106 போராளி களும் மூன்றாவது நாளாகிய 13-ம் திகதி 26 போராளி களும் வீரச்சாவு அடைந்த னர்.

மூன்று தினங்கள் நடை பெற்ற இந்நடவடிக்கைகளின் போது வீரச்சாவடைந்த இப் போராளிகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## பரீட்சை ஒத்திவைப்பு

நாளை நடைபெறவிருந்த யாழ் மாவட்டப் பாடசாலை களுக்கான ஆண்டு இறுதிப் பரீ ட்சை தவிர்க்கமுடியாததன் காரணத்தால் மறு அறிவித் தல் வரை பிற்போடப்பட்டுள் ளதுஎன யாழ் கல்வித்திணைக் கள தேர்வுச் சபையினர் அறி வித்துள்ளனர்.

## பூநகரியில் படையினர் தரையிறங்கியுள்ளனராம்

பூநகரி பிரதேசத்தை விட்டு விடுதலைப்புலிகள் வெளியேறி வந்த பின்னர் 200 இராணு வத்தினர் அப்பகுதியில் தரை யிறங்கியுள்ளதாக சிறிலங்கா அரசாங்கம் அறிவித்துள்ளது.

இவ் இராணுவத்தினர் அங் கிருந்த காயமடைந்தோரை அப்புறப்படுத்தியுள்ளதாகவும் மற்றும் சிதறி ஓடிய இராணு வத்தை ஒன்று சேர்க்கும் முய ற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அங்கு 42 இராணுவத்தின ரின் சடலங்கள் மீட்கப்பட்டு ள்ளதாகவும் அப்பகுதியில் பல இராணுவத்தினரின் சட லங்கள் சிதறிக்கிடப்பதாகவும் கூறப்படுகிறது.

இராணுவத்தினருக்கு ஏற் பட்ட சரியான உயிர், தள பாட இழப்புப்பற்றி இன்ன மும் மதிப்பீடு செய்ய முடி யாதுள்ளதாக பாதுகாபபு அமைச்சு வட்டாரங்கள் தெரி வித்தன.

## பூநகரியில் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள்

பூநகரி - நாகதேவன் துறை கூட்டுத்தளத்திலிருந்து விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதத் தளபா டங்களில் ஒரு தொகுதியின் விபரம் வருமாறு:

- நீருந்து விசைப்படகுகள் — 05
- யுத்த டாங்கிகள் — 02
- 120 எம். எம். நீண்ட தூரப் பீரங்கி — 04
- பின்னுதைப்பற்ற பீரங்கி (ஆர் சி. எல்) — 01
- 81 எம். எம். மோட்டார்கள் — 02
- 82 எம். எம். மோட்டார்கள் — 01
- 60 எம். எம். மோட்டார்கள் — 19
- ராடர்கள்
- ஆர். பி. ஜி. — 20
- எம். 203 ரக லோஞ்சர்கள் — 03
- 50 கலிபர் கன இயந்திரத் துப்பாக்கி — 13
- மினி மி இலகு இயந்திரத் துப்பாக்கி — 09
- பி. கே. ஜி பி. எம். ஜி. ரக துப்பாக்கி — 08
- ஜி. பி. எம். ஜி. துப்பாக்கி — 05
- 40 எம். எம். டொங்கான் — 04
- 303 இலகு இயந்திரத் துப்பாக்கி — 03
- எல்-3 இலகு இயந்திரத் துப்பாக்கி — 04
- ரி. 81 இலகு இயந்திரத் துப்பாக்கி — 01
- ஏ. கே. எல். எம். ஜி. — 16
- எம் - 16 ஏ2 ரக துப்பாக்கி — 11
- ஏ. கே. ரக துப்பாக்கி — 420
- டாங்கி பீரங்கிக்கான ஷெல் — 185
- நடுத்தர ரவைகள் மூன்று லட்சத்திற்கு மேல்

கைப்பற்றப்பட்ட ஆயுத தளபாடங்களின் மேலதிக விபரம் நாளை வெளிவரும்

# யாகப்பர் தேவாலயம் சிதைந்தது; 9 பொதுமக்கள் உடல் சிதறிப் பலி

## சிறிலங்கா விமானப்படை அனர்த்தம்

நேற்றுக் காலை 7-30 மணி யளவில் குருநகரில் நடை பெற்ற சுப்பர் சொனிக் தாக் குதலில் 132 வருடங்களுக்கு மேல் பழமைவாய்ந்த கத்தோலிக்க தேவாலயமான புனிதயாகப்பர் ஆலயம் பாரிய சேதமடைந்தது.

இத்தாக்குதல் நடைபெற்ற சமயம் ஆலயத்தில் தஞ்சம டைந்த மக்களில் ஒன்பது பேர் உடல்சிதறி உயிர்நீத்துள்ளார் கள் தமது உடன்பிறப்புக்களின் உடல்களை தேடும்முயற்சியில் குருநகர் மக்கள் ஆலயத்தின் இடிபாடுகளை கிளறும் முயற் சியில் ஈடுபட்டிருந்தனர். இடி பாடுகளில் இருந்து உருக்குலை ந்த உடல்கள், சதைத் துண் டங்கள் என்பன வெளியே எடுக்கப்பட்டு குவி த்து வைக்கப்பட்டிருந்தன. இவை பின்னர் நேற்று நண்

[4ஆம் பக்கம் பார்க்க]



குண்டுவீச்சால் சேதமடைந்த யாழ். யாகப்பர் தேவாலயம்

## வத்திக்கானுக்கு அறிவிப்பு

யாழ் மறை மாவட்டத்தி லுள்ள புனித யாகப்பர் ஆல யம் மீது சிறிலங்கா விமானப் படை நடத்திய தாக்குதல் குறித்து இலங்கையின் கத் தோலிக்க அதிமேற்றாணியார் மேதகு மார்க்ஸ் பெர்னாண் டோவுக்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் தக வல் அனுப்பியுள்ளார்.

வத்திக்கானுக்கும் புனித யாகப்பர் ஆலயம் தாக்குதல் குறித்த அறிக்கையை யாழ். ஆயர் அனுப்பியுள்ளார்.

புனித யாகப்பர் தேவால யம் 132வருடங்கள் பழமை வாய்ந்ததாகும்

## உயர் அதிகாரி உட்பட ஒன்பது படையினர் பலி

(கொழும்பு)

பலாலி, வசாவிளான் பகுதி களில் விடுதலைப்புலிகள் நேற்று மேற்கொண்ட தாக்கு தல்களில் ஓர் அதிகாரி உட் பட ஒன்பது இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

பலாலி விமானத்தளம் மீது விடுதலைப்புலிகள் மேற் கொண்ட தாக்குதலில் அங்கு காவலில் ஈடுபட்டிருந்த ஓர் அதிகாரி உட்பட நான்கு இரா ணுவத்தினர் கொல்லப்பட்ட னர் எனவும்,

இதேவேளை வசாவிளான் பகுதியில் உள்ள இராணுவ முகாம் மீது விடுதலைப்புலி களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஐந்து சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப் பட்டனர், பலர் காயமடைந் தனர் எனவும் இராணுவ உயர் அதிகாரி ஒருவரை மேற் கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

## சிறு விளம்பரம்

### நவீன சிகிச்சை

உங்களின் இருதயம் சீராக இயங்குகின்றதா? இரத்த அழுத்தத்துடன் நாடித் துடிப்பு எவ்வளவு? யாவும் Electronic Aunicular Pulsations Therapy யினாலும் Digital Electronic Meter மூலமும் நவீன வைத்திய உபகரணங்களினாலும் சகல நோய்கட்கும் சிகிச்சையளிக்கப்படும். இரெட்ணம்வைத்தியசாலை, 129, ஸ்ரேசன் றோட், யாழ்ப்பாணம். (6518)

### 108 திருத்தல தோத்திரங்கள்

விற்பனையாகின்றது! அருட்கவி சி. வினாசித்தம்பி புலவரால் பாடப்பட்ட ''சிறிநாராயணப் பெருமான் 108 திருத்தலத் தோத்திரங்கள்'' நூல் (பன்னிரு ஆழ்வார்கள் பாடிய தோத்திரங்களும் அடங்கியது) பக்கங்கள் 110, விலை: 60 ரூபா பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி-7887]

### உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள

உங்கள் கடிகாரங்களை றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள டில்கா வாச் அன்ட் ரேடியோ வேக்ஸ், ஸ்ரான்லி வீதி, (வானவில் அருகாமை) யாழ்ப்பாணம் கிளை; கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-7848)

### விற்பனைக்குண்டு

சகல வசதிகளும் கொண்ட காணியும் (2 பரப்பு) வீடும் (திருநெல்வேலி சந்தைக்கருகாமையில்) விற்பனைக்குண்டு தொடர்பு: திருமதி வனிதா தேவி விவேகானந்தம் (C/O சோமசுந்தரம்) செம்பாட்டு லேன் [வீரவேங்கை ஜெயராஜ் வீதி] பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, மேஜர் முரளி பாலர் பாடசாலைக்கு அருகாமையில் (6572)

---

யா/பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை

## 6-ம் ஆண்டு அனுமதி


மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பப் படிவத்தினை பாடசாலை அலுவலகத்தில் ரூ. 40/- செலுத்தி பெற்று பூர்த்தி செய்து 19-11-93க்கு முன் அதிபரிடம் ஒப்படைக்கவும்.

அதிபர்

(6566)

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 6.2.1976

வீரச்சாவு 19.10.1990

திதி:- 14.11.1993

பலாலி நேரடி மோதலில் வீரச்சாவடைந்த

### 2-ம் லெப்டினன்ட் சீனன்

(சற்குரு சதீஸ்)

உன் பிரிவால் வாடும்
தந்தை, தாய்,
சகோதரர்.

இ. சற்குரு,
சதீஸ் வீதி,
நீர்வேலி வடக்கு
நீர்வேலி.

(6565)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு 18-04-1938

உதிர்வு: 26-10-1992

### திருமதி இரத்தினம்மா தம்பிராசா

திதி 14-11-93

எமது இல்ல விளக்கே, ஈடில்லா கற்பகமே. ஒப்பற்ற மாதாவே! அம்மா! எங்கள் கண்கண்ட தெய்வமே- உன்னைப்போல் ஒரு குடும்பத்தலைவியைக் காண்பது அரிதிலும் அரிது உனை நாடி எவர் வந்திடினும் மனங்கோணாது உதவிடும் உத்தமியே உனை இழந்து தவித்திடும் உன் குடும்பத்தார் உனக்கு முத்திப்பேறு கிடைத்திட தினமும் வேண்டுகின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்
மக்கள் மருமகன்
பேரப்பிள்ளைகள்.

78/6 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(6553)

---

## 45-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு 11-06-1976

வீரச்சாவு 01-10-1993

### 2-ம் லெப். காவேரி

(இராசேந்திரம் சூரியகலா
(சாந்தை, பண்டத்தரிப்பு

2-ம் லெப். காவேரியின் 45-ம் நாளில் [14-11-93] சக போராளிகள், உற்றார், உறவினர் அனைவரையும் அழைக்கின்றோம்.

01-10-93 இவருடன் கிளாலி - புலோப்பளையில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 7-11-1971

இறைவன் அடியில் 11-11-1992

### கதிர்காமு கமலவரதன்

திதி 14-11-93

முந்நூறு நாள் சுமந்து பெற்றெடுத்த
அன்னை முகம் மீளவந்து காண்பதற்கு
காலனுனைத் தடுத்தானோ
கண்களில் நீ ஆடுகின்றாய்
நினைவலைகளில் நீந்துகின்றாய்
இறைவனடி சேர்ந்தாயோ
தாயோடு உறவுகளும் துடிக்கின்றன
காலங்கள் சென்றாலும் ஆறாத
எம் நெஞ்சம் வேகு தய்யா
அண்ணனுக்கு தம்பியாய்
அன்னைக்கு அரிய மகனாய்
இனிய குணமும் திறமைகளுமாய்
குடியிருந்த உன்னைக் காண்பதெப்போ
மனத்துயரைத் தீர்த்திட வந்திடுவாய் என் மகனே
ஐயா அம்மா என்று அலறிச் சென்றாயோ பொன்மகனே
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

க. வரதன் பகீர் மூவேந்தர்
ஆழியவளை
நாகர் கோவில் மேற்கு.

உன் பிரிவால் வாடும்
ஐயா, அம்மா, அண்ணா,
அத்தான்மார், அக்காமார்,
அண்ணிமார், தம்பி, தங்கைகள்,
மக்கள், மருமக்கள், உறவினர்கள்.

(6551)

---

## நினைவு கூருகின்றோம்... 1993-11-14

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் மன்னார், அடம்பன், ஆட்காட்டிவெளிப் பகுதியில் உலங்கு வானூர்தியின் மூலம் தரையிறங்கிய சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். ரொனி** (யோசப் சௌந்தரநாயகம் - பறப்பாங் கண்டல், உயிலங்குளம் - மன்னார்)

மன்னார் கூராய் ஆற்றில் எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கியதில் எமைப்பிரிந்த-

**பபா** (மருசலின் ஜெபநேசன் - பெரியபண்டிவிரிச்சான் - மன்னார்)

1986ஆம் ஆண்டு மட்டு, கள்ளியந்தீவுப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினருடனான சமரின்போது சயனைட் உட்கொண்டு பின்னர் கைக்குண்டை வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய-

**புண்ணியன்** (இருதயம் மைக்கல் கொலின் - 14/1, மத்தியவீதி - மட்டு)

கூனித்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முற்றுகையின் போது ...

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்...

1993 திசெம்பர் 31 ஆம் திகதி வரை.

ரூபா 5,270/- (நிலையானது)மாதமொன்றுக்கு. 1994 ஜனவரி 1 ஆம் தேதி தொடக்கம்.

தற்காலிக விரிவுரையாளர்
ரூபா 5,275/- (நிலையானது)மாதமொன்றுக்கு. 1993 திசெம்பர் 31 ஆம் திகதி வரை.

ரூபா 6,050/- (நிலையானது) மாதமொன்றுக்கு.

...னர் இப்பல்கலைக்கழகத்தின் சிரேட்ட உதவிப் பதிவாளர் தாபனங்கள் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் படிவங்களையும் விபரங்களையும் தபால் மூலம் பெறவிரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை / தபாற் கட்டளையுடன் 23 × 10 ச. மீ அளவுடைய ...

சோமசுந்தரம்) செம்பாட்டு லேன் [வீரவேங்கை ஜெயராஜ் வீதி] பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, மேஜர் முரளி பாலர் பாடசாலைக்கு அருகாமையில் (6572)

இ. சற்குரு,
சதீஸ் வீதி,
நீர்வேலி வடக்கு
நீர்வேலி.

உன் பிரிவால் வாடும்
தந்தை, தாய்,
சகோதரர்.

(6565)



வீரச்சாவு

01-10-1993

## 2-ம் லெப். காவேரி

(இராசேந்திரம் சூரியகலா
(சாந்தை, பண்டத்தரிப்பு

2-ம் லெப். காவேரியின் 45-ம் நாளில் [14-11-93] சக போராளிகள், உற்றார், உறவினர் அனைவரையும் அழைக்கின்றோம்.

01-10-93 இவருடன் கிளாலி - புலோப்பளையில வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

இருபாலை கிழக்கு.
[6568]

அம்மா, அப்பா,
சகோதரர்கள், அத்தான்மார்

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால்பெற்றுக்கொள்ளப்படும்.

**பயிராக்கவியல்/ மிருகவிஞ்ஞானம்/ விவசாயப் பொருளியல்/ விவசாயப் பொறியியல்/ விவசாய இரசாயனவியல்/ விவசாய உயிரியலில் தற்காலிக உதவி விரிவுரையாளர்/ விரிவுரையாளர்/ தற்காலிக செய்முறை காட்டுநர்!**

**சம்பள அளவுத் திட்டம்**

தற்காலிக உதவி விரிவுரையாளர்

ரூபா 4,585/- (நிலையானது)மாதமொன்றுக்கு. 1993 திசெம்பர் 31 ஆம் திகதி வரை.

ரூபா 5,270/- (நிலையானது)மாதமொன்றுக்கு. 1994 ஜனவரி 1 ஆம் தேதி தொடக்கம்.

தற்காலிக விரிவுரையாளர்

ரூபா 5,275/- (நிலையானது)மாதமொன்றுக்கு. 1993 திசெம்பர் 31 ஆம் திகதி வரை.

ரூபா 6,050/- (நிலையானது)மாதமொன்றுக்கு. 1994 ஜனவரி 1 ஆம் தேதி தொடக்கம்.

தற்காலிகச் செய்முறைக் காட்டுநர்

ரூபா 3,835/- (நிலையானது)மாதமொன்றுக்கு. 1993 திசெம்பர் 31 ஆம் தேதி வரை.

ரூபா 4,420/- (நிலையானது)மாதமொன்றுக்கு. 1994 ஜனவரி 1 ஆம் தேதி தொடக்கம்.

**விண்ணப்ப முடிவுத் தேதி**

**1993 - 12 - 10**

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும் இதர விபரங்களையும் நிதிக் கிளையில் ரூபா 20/- செலுத்தியபின்னர் இப்பல்கலைக்கழகத்தின் சிரேட்ட உதவிப் பதிவாளர் தாபனங்கள் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். படிவங்களையும் விபரங்களையும் தபால் மூலம் பெறவிரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை / தபாற் கட்டளையுடன் 23×10 ச. மீ அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ளவிண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல்வேண்டும்.

**பதிவாளர்,**

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993.11.05.

(சி-7925

---

ஓம்
ஸ்ரீராகவேந்திராய நமக

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!
நிகழும் ஸ்ரீமுக வருடம் ஐப்பசி மாதம் 30-ம் நாள் (15. 11. 93) திங்கட்கிழமை காலை 9. 00 மணிமுதல் 10. 30 மணி வரையுள்ள தனு லக்கினமும் சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| எமது சிரேஷ்டபுத்திரன் திருநிறைசெல்வன் | எமது ஏகபுத்திரி திருநிறைசெல்வி |
| **நிரஞ்சன** | **ரேணுகாதேவி** |
| அவர்கட்கும் | அவர்கட்கும் |

திருச்சி, கலக்டர் ஆபீஸ் றோட்,
சங்கம் ஹோட்டல் மண்டபத்தில் நடைபெறவிருக்கும்
திருமண வைபவத்திற்கு தாங்கள் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து, விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

**திரு. திருமதி க. அருமைச்செல்வம்**
சீ. 14, 5ஆவது மெயின் றோட்,
இராமலிங்க நகர், திருச்சி.

**திரு.திருமதி வ.இ. வயித்திலிங்கம்**
173-3/1, ஆட்டுபட்டித்தெரு கொழும்பு 13.
பங்காளர் ஆர். வி ஜி பீடி ஸ்தாபனம்
58, குறுக்குத்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.

(6564)

இருவீட்டார் அழைப்பு

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து ஒப்பந்த அடிப்படையிலான தரவுப் பதிவு இயக்குநர் பதவிக்கான விண்ணப்பங்கள் 1993 திசெம்பர் 10ஆம் தேதிவரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

சம்பளம் ;- 4105/- ரூபா மாதமொன்றுக்கு (நிலையானது)

தகைமைகள்:- க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் சித்தியடைந்து அவற்றில் ஐந்து திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு:- தரவுப் பதிவு இயக்குநராகப் பணியாற்றி அனுபவம் பெற்றோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

வயது:- நாற்பது ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் 20/- ரூபாவை நிதிக் கிளையில் செலுத்திய பின்னர் இப் பல்கலைக்சழக ஸ்தாபனக் கிளையின் சிரேட்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெறக் கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும், இதர விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக்கட்டளை/ தபாற்கட்டளையுடன் 23×10 ச. மீ அளவுடைய சுயமுகவரியிட்டு 1/- ரூபா முத்திரையொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவத்தில் அனுப்பப்படும் விண்ணப்பம் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும். அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச்சட்ட சபையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனத்தவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்தேதியின் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்களும், தெளிவில்லாமல் விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993-11-09

(சி-7926)

---

## நினைவு கூருகின்றோம்... 1993-11-14

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் மன்னார், அடம்பன், ஆட்காட்டிவெளிப் பகுதியில் உலங்கு வானூர்தியின் மூலம் தரையிறங்கிய சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். ரொனி** (யோசப் சௌந்தரநாயகம் - பறப்பாங்கண்டல், உயிலங்குளம் - மன்னார்)

மன்னார் கூராய் ஆற்றில் எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கியதில் எமைப்பிரிந்த-

**பபா** (மருசலின் ஜெபநேசன் - பெரியபண்டிவிரிச்சான்-மன்னார்)

1986ஆம் ஆண்டு மட்டு, கள்ளியந்தீவுப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினருடனான சமரின்போது சயனைட் உட்கொண்டு பின்னர் கைக்குண்டை வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய-

**புண்ணியன்** (இருதயம் மைக்கல் கொலின் - 14/1, மத்தியவீதி - மட்டு)

கூனித்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முற்றுகையின் போது சுடப்பட்டு வீரச்சாவெய்திய-

★ **மாதவன் / மாஸ்ரர்** (வை. மாதவராசா -எல். பி 03 மூதூர் - திருமலை)

மொறட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய

★ **குமார்** (கார்த்திகேசு ரவிக்குமார் - அக்கரைப்பற்று)

★ **மனோகரன் / மட்டை** (வேலுப்பிள்ளை விஜயராசா அக்கரைப்பற்று)

1987ஆம் ஆண்டு யாழ் - கொழும்புத்துறைப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய-

அரியாலைப் பிரதேசப் பொறுப்பாளர்

**அகிலன்** (கந்தையா சசிக்குமார் - சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு - யாழ்)

மட்டு வந்தாறுமூலைப் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். சுகந்தன்** (முத்தர் புஸ்பராசா-கோரக்கல்லிமடு மட்டு)

1989ஆம் ஆண்டு முல்லைத்தீவில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர்களான -

**சங்கர்** (— —)

**கிலியன்** (— —)

1989ஆம்ஆண்டு அம்பாறை நகர்ப் பகுதியில் சிறிலங்கா காவற்றுறையினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய-

★ **ஜெயராசா** (— — அக்கரைப்பற்று)

★ **பாப** (— — அக்கரைப்பற்று)

1990ஆம் ஆண்டு சாவகச்சேரிப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட உழவுஇயந்திரவிபத்தில் எமைப் பிரிந்த-

**கண்ணன் / செல்வம்** (நாராயணசாமிசெல்லக் கிருஷ்ணன் சுழிபுரம் மத்தி-யாழ்)

இணுவில் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப் பிரிந்த-

**அமலன்** (செல்வராசா கேதீஸ்வரன் - கணேஸ்வீதி, ஆனைக்கோட்டை - யாழ்)

மாவிட்டபுரம் சந்தைச் சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**முஸ்தபா** (ரட்ணம் சந்திரசேகர்- புத்தூர்கிழக்கு யாழ்)

மட்டுநகரில் எமது முகாமில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த-

**மயூரன்** (சீனித்தம்பி ஜீவராஜ் பார்வீதி - மட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கியகாலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி/7927)

சிந்தனைக்கு

கோழைகள் தயங்கித் தடுமாறுகின்றனர்.
கொள்கை உறுதியுடன் துணிபவர்களே
அபாயத்தை வெல்கின்றனர்.

- முதலாம் எலிசபெத் அரசி

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 11-11-1993

தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2020
க பெ எண் - 05

## சிறிலங்காவின் கோழைத்தனம்

சிறிலங்கா அரசின் அரக்கத்தனம் எந்தளவிற்குச் செல்லும் என்பதற்கு யாழ். செயலகம் மீது நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சும், சென். ஜேம்ஸ் தேவாலயத்தின் மீதும், நடத்தப்பட்ட மிருகத்தனமான தாக்குதலும் மீண்டுமொரு சிறந்த எடுத்துக்காட்டாகும். ஆனால், சிறிலங்கா விமானப்படையையோ அன்றி ஆயுதப்படையோ இவ்வாறான அரக்கத் தனங்களைப் புரிவது ஒன்றும் புதுமையானதல்ல. கடந்த வருடம் நத்தார் தினத்தன்றும் சிறிலங்கா விமானப்படையினர் அரியாலையில் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலிலும் பலர் கொல்லப்பட்டமை சுட்டிக்காட்டத்தக்கது.

1990ஆம் ஆண்டு தீபாவளி தினத்தன்று, பலாலி இராணுவ முகாமில் இருந்து தாக்குதல் நடவடிக்கை ஒன்றை சிறிலங்கா இராணுவம் தொடங்கியது. அப்போதைய சிறிலங்காவின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரான ரஞ்சன் விஜயரெட்ணா ''எமது படையினர் யாழ்ப்பாணத்தில் வெடி கொழுத்தித் தீபாவளி கொண்டாடுகின்றனர்'' என கிண்டல் செய்தார். அந்தளவிற்கு சிங்கள அரசியல் வாதிகளின் பண்பு இருந்தது.

இவ்வாறாக, சிறிலங்கா ஆயுதப்படையினரும் சரி, அமைச்சர்களும் சரி, அரசியல் வாதிகளும் சரி இனப்படுகொலை குறித்தோ, அன்றி சிங்கள பௌத்தர்களைத் தவிர ஏனைய மக்களை இந்நாட்டின் பிரஜைகள் என்றோ, அவர்களின் உரிமைகள், பண்டிகைகள் பற்றியோ கவலைப்பட்டதோ அன்றி பொருட்படுத்தியதோ கிடையாது. அந்தளவிற்குச் சிங்களப் பேரினவாத சிந்தனைகள் சிறிலங்கா ஆட்சியாளரிடம் நிலைபெற்றுவிட்டது.

ஏனைய இனத்தினர்மீதும் சமயத்தினர்மீதும் சிறிலங்கா பேரினவாதம் இவ்வாறான கண்மூடித்தனமான தாக்குதல்களைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளமை ஒருபுறமிருக்க, அரசின் நிர்வாக மையங்களில் முக்கியமானதும், வடபகுதியுடன் சிறிலங்கா அரசாங்கம் தொடர்புபட்டுள்ளது என்பதை வெளிக்காட்டும் அமைப்புமான யாழ் செயலகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டமையும், அதில் சிறிலங்கா அரசின் பிரதிநிதி காயப்பட நேர்ந்தமையும், சிறிலங்கா அரசு தமிழர் பிரதேசத்தின் மீதும், தமிழர்கள்

# ஆப்கானில் அவதிப்படும் அமெரிக்க சி. ஐ. ஏ.

உலகின் உடனடி கவனத்திலிருந்து மெல்ல மெல்ல மறைந்து போகும் பல்வேறு சர்வதேச சிக்கல்களில் இன்று ஆப்கான் சிக்கலும் ஒன்றாகிவிட்டது. 1989ம் ஆண்டு இங்கிருந்து ருஷ்யப்படைகள் வெளியேறியதும் ஆப்கானித்தானைதம்வசமாக்கியபோராளிகள்தமக்குள்ஓயாமல் மோதியதும் பின் ஒருவாறாக பல்வேறு அழுத்தங்கள் காரணமாக அங்கொரு அரசு அமைக்கப்பட்டதும் உலகின் கவனம் கலைவதற்கு தக்க காரணங்களாகிவிட்டன. ஆனால் யார் எதனை மறந்தாலும் ஆப்கான் போராளிகள் தமது பகைமையை மறக்க தயாரில்லாத நிலையில் இன்றளவும் மோதல்கள் தொடர்கின்றன. முன்னர் பல்லாண்டு காலமாக இப்பகுதிகளிலே மிக மும்முரமாக செயல்பட்ட அமெரிக்க சி. ஐ. ஏ உளவு நிறுவனம் இப்போது இம்மோதல்கள் பற்றி கவலைப்படுவதில்லை. ஆனால் இப்போது முன்னரை விட முக்கிய கவலையொன்று சி. ஐ. ஏ க்கு ஏற்பட்டுவிட்டது.

ஆப்கானில் முன்னர் இருந்த ருஷ்யச் சார்பு அரசாங்கத்தை எதிர்த்துப்போராடுவதற்கு வேண்டிய ஆயுத, பணவசதிகள் மட்டுமன்றி பாகிஸ்தான் எல்லைப் புறங்களில் பயிற்சி வசதிகளையும் மிகப் பாரியளவில் ஏற்படுத்திக் கொடுத்தது அமெரிக்க சி. ஐ. ஏ இப்போது அதன் விளைவுகளையும் சி. ஐ. ஏ மட்டுமன்றி முழு அமெரிக்காவுமே சந்திக்க நேரிட்டு விட்டது. அப்போது 'ருஷ்ய கம்யூனிச பூதம்' என உருவகப்படுத்தப்பட்ட சோவியத்திற்கு எதிராக கடும் பிரசாரம் செய்வதற்கு இஸ்லாமிய மதத் தலைவர்கள் பயன் படுத்தப்பட்டனர். இவர்கட்கு அமெரிக்காவில் தங்கியிருக்க வேண்டிய சட்டபூர்வ வசதிகள் யாவும் அப்போது சி. ஐ. ஏ யால் செய்து கொடுக்கப்பட்டது. இத்தகைய சூழலைப் பயன்படுத்திய பல ஆப்கான் போராளிகள் பாகிஸ்தான், அல்லது சூடான் வழியாக அமெரிக்காவை இலகுவில் சென்றடைந்தனர், இது பழைய கதை. அப்போது இவ்வழிமுறை சி. ஐ. ஏ க்கு மிக தேவைப்பட்டது, நன்மையும் அளித்தது. ஆனால் இப்போது எல்லாமே தலைகீழாக' ஏறுக்கு

ரப்பட்டுள்ள பலரும் இஸ்லாமிய அடிப்படை வாதிகள் என்பதும் இவர்களில் பலர் முன்னைய ஆப்கான் போராளிகள் என்பதும் இவர்கள் அமெரிக்க மண்ணிலே முன்னர் சி.ஐ ஏயின் உதவியோடு ஊடுருவினர் என்பதும் வெளிப்படையாகி விட்டன. அதுமட்டுமன்றி இத்தகையோரின் சந்திப்பு மையமாக நியூயோர்க் நகரத்தில் இருந்த பள்ளிவாசலில் தலைமைக்குருவான பார்வையற்ற சேக் ஓமர் அப்துல் ரகுமான்' எகிப்திய அரசுக்கு எதிராக தீவிரமாக போராடி வரும் இஸ்லாமிய குழுவின் ஆன்மீகத் தலைவர் என்பதும் 1981ம் ஆண்டு எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் கொலையோடு தொடர்புபடுத்தப்பட்டவர் என்பது இப்போது வெளியாகிய தகவல்கள் ஆகும்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தொழுகையின்போதும் எகிப்திய ஜனாதிபதி முபாரக்கிற்கு மரணம் நேர வேண்டும் என தொழுபவர் இவர். இவரின் போக்கால் கடும் சீற்றம் கொண்ட முபாரக் இவரை 'சி ஐ.ஏ ஏஜன்ட்' எனக் கூறியதும் பின் அமெரிக்க அழுத்தத்தால் அவ்வாறு தான் கூறவில்லையென மறுத்ததும் இங்கே குறிப்பிடப்படவேண்டியவை. ரகுமான் இப்போது சதி செய்தார் என கைதாகி அமெரிக்கச் சிறையில் இருக்கிறார். இவருக்கு வேண்டிய வசதிகளை செய்து அமெரிக்காவிற்குள் வருவதற்கு அனுமதித்த அமெரிக்க உயர் அதிகாரிகள் யாவரும் சி ஐ ஏ ஊழியர்கள் என்பதுஇப்போது அம்பலமாகி விட்டது எனவே வினை விதைத்தவன்வினையை அறுக்க வேண்டிய நிலை. அமெரிக்க மண்ணிலே மேலும் பல குண்டு வெடிப்புகள், ஆட்கடத்தல்கள், கொலை என பல சதித்திட்டங்களை தீட்ட ரகுமான் முயன்றார் என அமெரிக்க அரசு இப்போது கூற நேர்ந்துவிட்டது.

இதுமட்டுமன்றி இன்னொரு பாரிய சிக்கலுக்கும் சிஐஏ முகம் கொடுக்க நேரிட்டுவிட்டது. முன்னர் ஒருகட்டத்தில் ருஷ்ய வான்படைக்குண்டு வீச்சுக்களால் ஆப்கான் போராளிகள் பாதிக்கப்பட்டபோது நிலைமை மோசமடையாமல் தடுப்பதற்காக சிஐஏ ஒரு வேலை செய்தது. அது 1000க்கும் மேற்பட்ட (Stinger)

ஏறத்தாழ அரைவாசி ஸ்ரிங்கர் ஏவுகணைகள் போராளிகள் வசம் தற்போது இருப்பதுதான். இவ்வாறாக 450 ஏவுகணைகள் இருக்கலாம்என மதிப்பிடப் படுகின்றது. இது அமெரிக்காவுக்கு மட்டுமன்றி தென்னாசியப்பகுதியில் அடக்குமுறை அரசுகட்கும் பெருத்த தலைவலியாகிவிட்டது இந்தியா, பர்மா, சிறிலங்கா போன்றவை தமக்கு எதிராக போராடும் போராளி அமைப்புகட்கு இவ் ஏவுகணைகள் கிடைக்கக்கூடிய அபாயத்தை எண்ணி தவிப்பதாகத்தெரிகிறது என 'ஏசியாவீக்' கூறுகிறது அதுமட்டுமன்றி உலக விமானப் போக்குவரத்து நிறுவனங்களும் இவைபற்றி பெரிதும் கவலைப்படுகின்றன. ஏனைய இஸ்லாமிய மத அடிப்படை வாதிகட்கு இவை கிடைக்கக் கூடாதென்பது சி.ஐ.ஏ யின் இன்றைய சிக்கலாகும். முன்னாள் பாகிஸ்தான் உளவு நிறுவனத் தலைவரோ ''இந்தியாவின் தாக்குதல்விமானங்கள் யாவற்றையும் இவ்ஏவுகணைகள் கொண்டு முற்றாக அழித்துவிட முடியும்'' என்கிறார்.

எனவே இப்போது இவ் ஏவுகணைகளை எப்படியும்திருப்பி பெறவேண்டும். கூடிய விலையை கொடுத்தாவது இவற்றை மறுபடியும் ஆப்கான் குழுக்களிடமிருந்து கொள்வனவு செய்ய அமெரிக்க அரசு முடிவு செய்து விட்டது. எனவே இப்போது பாகிஸ்தான் எல்லையில் உள்ளஆயுத வியாபாரச்சந்தைக்குள் புதிய வாடிக்கையாளராக சி ஐ ஏ நுழைந்துள்ளது. அதேசமயம் சிஐஏ யே இதன் முன்னாள் ஆயுத விநியோகத்தர் என்பது நகைப்புக்கு இடமாகிற தகவல். இப்போது சந்தையில் 'ஸ்ரிங்கர் ஏவுகணையின் விலைகள் ஏறிவிட்டன. இவை மட்டுமன்றி முன்னர் வழங்கப்பட்ட மிலான் ரக தாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளை திரும்பவாங்க சி ஐ.ஏ முயற்சிக்கின்றது. போராளிக் குழுக்களிலே பெரியதும் குர்புதின் கெக்மாட்டியார்தலைமைதாங்கும் கிஸ்பி இசுலாம் குழுவே கூடுதலாக ஸ்ரிங்கரை வைத்திருக்கிறது. ஆனால்ஒன்றைத் தன்னும் விற்க முடியாதென்பது இவர்கள் நிலைப்பாடு.

இவ்வாறாக கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாக

## நிலத்தை உடைத்துப் பீறும் நெருப்பாற்றை கைகளால் பொத்தலாம் என்றா நினைத்தாய்?

- புதுவை இரத்தினதுரை

மின்னாமல் ஒரு இடி
எதிரியின் மடியிலே__ விழுந்தது.
பகைவனின்
சிம்மாசனத்தின் பட்டுத்துணியில்
பொத்தல் விழுந்தது.
கண்டியில்
எண்கோண மண்டபத்தின்
சுவர்கள் வெடித்துச் சிதறிக்கொண்டன.
ஜெயவர்த்தனபுரத்தின்
பாராளுமன்றப் படிக்கற்கள்
மந்திரிகளின் பாதம்படுவதற்கு
கண்டனம் தெரிவித்தன.
'இலங்கை இராணுவம்
அணிவகுப்புக்கு மட்டுமே அழகானது'
சிங்கள மக்கள் தெரிந்து கொண்டனர்.
''சிசில்'' வெறும் விசில் என்பதை
பூநகரிக்குள்ளே புலிகள் புகுந்தபோது
கூலிப்படைகள் குறித்துக் கொண்டன.
சனாதிபதியின் மாளிகைவாசலில்
ஆடாது நிற்பானே ஒருவன்
அவனெங்கே?
குஞ்சத்தொப்பி, சிவப்புச்சட்டை
கையில் ஏந்திய கட்டியப் பொல்லு
தோளிற் தரித்த கறுப்புப் பட்டி
தாங்கிய ஒருவன் வாசலில் நிற்பான்
அவனெங்கே?
மேன்மைதங்கிய சனாதிபதியின்
மேதகுநிலையை உணர்த்தும் காவலன்
இன்று அவனைக் காணவில்லையே
ஏனவன் வேலைக்கு வரவில்லை
மானஸ்த்தன் போலும், மறைந்துவிட்டான்.
நேற்றுவரை
நாகதேவன்துறை
படுகொலைப் படகுகளின் துறைமுகம்
தமிழரின் குருதிபடிந்த வெட்டரிவாள்கள்
இங்கேதான் சாணை பிடிக்கப்பட்டன.
கடாரம் வென்ற இனத்தின் முதுகில்
காற்றுக் கொதுங்கிய கால்கள் படுவதா?
வன்னியன் மண்ணில் அந்நியன் வந்து
வரலாறெழுதிட எப்படி முடியும்?
எப்படி முடியும்?
எப்படி முடியும்?
எங்களின் மண்ணிதை எப்படிப் பொறுக்கும்?

''பூநகரிப் பாதையின் போக்குவரத்துக்கு
பேச்சுவார்த்தை'' என்றவனே!
''பிரபாகரனை மேசைக்கு அழைத்து
பேசுவோம்'' என்றவனே!

அந்தளவிற்கு சிங்கள அரசியல் வாதிகளின் பண்பு இருந்தது.

இவ்வாறாக, சிறிலங்கா ஆயுதப்படையினரும் சரி, அமைச்சர்களும் சரி, அரசியல் வாதிகளும் சரி இனப்படுகொலை குறித்தோ, அன்றி சிங்கள பௌத்தர்களைத் தவிர ஏனைய மக்களை இந்நாட்டின் பிரஜைகள் என்றோ, அவர்களின் உரிமைகள், பண்டிகைகள் பற்றியோ கவலைப்பட்டதோ அன்றி பொருட்படுத்தியதோ கிடையாது. அந்தளவிற்குச் சிங்களப் பேரினவாத சிந்தனைகள் சிறிலங்கா ஆட்சியாளரிடம் நிலைபெற்றுவிட்டது.

ஏனைய இனத்தினர்மீதும் சமயத்தினர்மீதும் சிறிலங்கா பேரினவாதம் இவ்வாறான கண்மூடித்தனமான தாக்குதல்களைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளமை ஒருபுறமிருக்க, அரசின் நிர்வாக மையங்களில் முக்கியமானதும், வடபகுதியுடன் சிறிலங்கா அரசாங்கம் தொடர்புபட்டுள்ளது என்பதை வெளிக்காட்டும் அமைப்புமான யாழ் செயலகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டமையும், அதில் சிறிலங்கா அரசின் பிரதிநிதி காயப்பட நேர்ந்தமையும், சிறிலங்கா அரசு தமிழர் பிரதேசத்தின் மீதும், தமிழர்கள் மீதும் எத்தகைய வெறுப்பைக் கொண்டுள்ளது என்பதற்கு மேலும் ஒரு எடுத்துக்காட்டாகும்

யாழ். செயலகம் மீதும், அரசாங்க அதிபர் மீதும் நடத்தப்பட்ட இத்தாக்குதலானது சிறிலங்கா அரசின் நிர்வாக அலகுகள் எவையும் இனிமேல் வடபகுதியில் தேவையில்லை? என்ற ரீதியில் மேற்கொள்ளப்பட்டதா? அல்லது தமிழர் பகுதியில் செயற்படும் இந்த நிர்வாக அலகினால் தமிழ் மக்களுக்கு உதவிகள் வழங்கப்படுகின்றதே ஒழிய அரசிற்கு இதனால், இலாபம் எதுவும் இல்லை. ஆகையினால் இதன் செயற்பாடு அவசியம் இல்லை என்ற நோக்கில் மேற்கொள்ளப்பட்டதா? இதில் எது என்பதைத் தெளிவாகக் கூறமுடியாதுவிட்டாலும், சிறிலங்கா அரசு எச்சசொச்சமாக உள்ள நிர்வாக அலகுகளினால் பயன்பாடு எதுவுமில்லை என்ற நிலையிலேயே இத்தாக்குதலை மேற்கொண்டது என்றுமட்டும் கூறலாம்.

இதேவேளை, தமிழரை சிறிலங்கா அரசின்மக்கள் எனக் கூறிக்கொள்ளும் அரசாங்கம் அம்மக்களைக் கொன்றொழிப்பது ஒருபுறம் இருக்க, தமது நிர்வாகிகளையே காப்பாற்ற வேண்டிய அவசியமில்லை என்ற நிலையில் செயற்படுவது அவர்கள் தமிழ் மக்களில் எவரையுமே வேறுபடுத்திப் பார்க்கவில்லை என்பதையே காட்டுவதாகவுள்ளது. இதனைச் சகலஅதிகாரிகளும் புரிந்துகொள்வது நல்லது.

ஆனால், கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் போன்று இல்லாது விடினும், சிறிலங்கா அரசிற்கு விசுவாசமான ஊழியர்களாகச் செயற்படும் அரச அதிகாரிகளும் இல்லாமல் இல்லை. ஆனால், இவர்கள் எவ்வளவுதான் விசுவாசம் காட்டிய போதும், சிங்கள பேரினவாதிகளும், சிங்கள அரசும் இவர்களின் சேவைகளை போற்றப்போவதோ, அன்றிபாராட்டப்போவதோ இல்லை. அதாவது, இவர்கள் தமிழர்கள் என்பதை அவர்கள் மறந்துவிடமாட்டார்கள்.

அத்தோடு, சிறிலங்காவின் மிலேச்சத்தனமான தாக்குதல்கள் இத்துடன் நின்றுவிடப் போவதில்லை, தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் முன்னேற முன்னேற இவ்வாறான நடவடிக்கைகளை சிங்கள அரசு மேற்கொள்வது அதிகரித்தே வரும் அதாவது விடுதலைப் புலிகளை நேரடியாக எதிர்கொள்ள சிறிலங்கா படைகளுக்கு முடியாதநிலை உருவாகி வரவர அப்பாவிகளைக் கொன்றொழிக்கும் நடவடிக்கைகளும் அதிகரித்துக் கொண்டே வரும் இந் நிலையில், சிங்கள அரசு தம்மைக் காப்பாற்றும் என தமிழர்கள் யாராவது நம்பி இருப்பார்களே ஆனால், அதற்காக இவர்கள் வருந்த வேண்டி வரும். சிலவேளை வருந்தக்கூட அவர்களுக்கு நேரம் இல்லாது போகலாம்.

முழு அமெரிக்காவுமே சந்திக்க நேரிட்டு விட்டது. அப்போது 'ருஷ்ய கம்யூனிச பூதம்' என உருவகப்படுத்தப்பட்ட சோவியத்திற்கு எதிராக கடும் பிரசாரம் செய்வதற்கு இஸ்லாமிய மதத் தலைவர்கள் பயன் படுத்தப்பட்டனர். இவர்கட்கு அமெரிக்காவில் தங்கியிருக்க வேண்டிய சட்டபூர்வ வசதிகள் யாவும் அப்போது சி. ஐ. ஏ யால் செய்து கொடுக்கப்பட்டது. இத்தகைய சூழலைப் பயன்படுத்திய பல ஆப்கான் போராளிகள் பாகிஸ்தான், அல்லது சூடான் வழியாக அமெரிக்காவை இலகுவில் சென்றடைந்தனர், இது பழைய கதை. அப்போது இவ் வழிமுறை சி. ஐ. ஏ க்கு மிக தேவைப்பட்டது, நன்மையும் அளித்தது. ஆனால் இப்போது எல்லாமே தலைகீழாக' ஏறுக்கு மாறாகமாறிவிட்டது சி. ஐ. ஏ க்கு பெருத்த தலைவலியை மட்டுமல்ல அவமானத்தையும் தேடித்தந்துவிட்டது அதன் ஆப்கான் தொடர்பு.

சிலகாலத்திற்கு முன் பெப்ரவரி 26ம் திகதிநியூயோர்க்சர்வதேச வர்த்தக மையத்திலேற்பட்ட பாரிய குண்டுவெடிப்பின் பின்னணி இன்று சி ஐ ஏயை முற்றாக அம்பலப்படுத்திவிட்டது. குண்டுவெடிப்பிற்கு காரணமானவர்கள் என குற்றம் சாட்டப்பட்டு இப்போது வழக்குத் தொட அனுமதித்த அமெரிக்க உயர் அதிகாரிகள் யாவரும் சி ஐ ஏ ஊழியர்கள் என்பதுஇப்போது அம்பலமாகி விட்டது எனவே வினை விதைத்தவன்வினையை அறுக்க வேண்டிய நிலை. அமெரிக்க மண்ணிலே மேலும் பல குண்டு வெடிப்புகள், ஆட்கடத்தல்கள், கொலை என பல சதித்திட்டங்களை தீட்டரகுமான் முயன்றார் என அமெரிக்க அரசு இப்போது கூற நேர்ந்துவிட்டது.

இதுமட்டுமன்றி இன்னொரு பாரிய சிக்கலுக்கும் சிஐஏ முகம் கொடுக்க நேரிட்டுவிட்டது. முன்னர் ஒருகட்டத்தில் ருஷ்ய வான்படைக்குண்டு வீச்சுக்களால் ஆப்கான் போராளிகள் பாதிக்கப்பட்டபோது நிலைமை மோசமடையாமல் தடுப்பதற்காக சிஐஏ ஒரு வேலை செய்தது. அது 1000க்கும் மேற்பட்ட (Stinger) ஸ்ரிங்கர் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை ஆப்கான் குழுக்கட்கு விநியோகித்ததுமிக துல்லியமாக இலக்கினை தாக்கக்கூடிய மிக இலகுவாக குறைந்தளவு பயிற்சியோடுபயன்படுத்தக்கூடிய இவ் ஏவுகணைகள் அப்போது ருஷ்யாவுக்கு பலத்த பின்னடைவுகளை ஏற்படுத்தின. 1989 - ம் ஆண்டு வரை ஏறத்தாழ 187 ருஷ்ய வானூர்திகள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக கூறப்படுகிறது- இப்போது எழுந்துள்ள புதிய சிக்கல்கள் என்னவென்றால் வியாபாரச்சந்தைக்குள் புதிய வாடிக்கையாளராக சி ஐ ஏ நுழைந்துள்ளது. அதேசமயம் சிஐஏ யே இதன் முன்னாள் ஆயுத விநியோகத்தர் என்பது நகைப்புக்கு இடமாகிற தகவல். இப்போது சந்தையில் 'ஸ்ரிங்கர் ஏவுகணையின் விலைகள் ஏறிவிட்டன. இவை மட்டுமன்றி முன்னர் வழங்கப்பட்ட மிலான்ரக தாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளை திரும்பவாங்க சி ஐ.ஏ முயற்சிக்கின்றது. போராளிக் குழுக்களிலே பெரியதும் குர்புதின் கெக்மாட்டியார்தலைமைதாங்கும் கிஸ்பி இசுலாம் குழு வே கூடுதலாக ஸ்ரிங்கரை வைத்திருக்கிறது. ஆனால்ஒன்றைத் தன்னும் விற்க முடியாதென்பது இவர்கள் நிலைப்பாடு.

இவ்வாறாக கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாக ஆப்கானோடு தொடர்பு பட்டவர்கள் திகைக்க நேரிட்டுள்ளது. வல்லாண்மையுள்ள நாடுகள் தமது சுயநலத்திற்கு கருவிகளாக பயன்படுத்த விரும்புபவர்கள்- இறுதியில் அவர்கட்கே பலத்த அடியை கொடுப்போராக ஆபத்தை விளைவிப்போராக மாறுவது இன்று வழமையானவரலாற்று நியதியாகிவிட்டது.

புலிகளின் குரல் வானொலி
தமிழீழம்

# இராணுவத்தினர் தாக்குதல்; பயணிகள் படுகாயம்

## வவுனியா தடைமுகாமில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா இராணுவ சோதனை முகாமில் சிறிலங்கா இராணுவத்தா அப்பாவித்தமிழ்ப் பயணிகள் பலர் தாக்கப்பட்டனர். மேலும் பலர் தாக்கப்பட்டு கண்கள் கட்டப்பட்ட நிலையில் இராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

வவுனியா நகரிலிருந்து வடக்கு நோக்கி வந்த பயணிகளும், வடக்கிலிருந்து புறப்பட்ட பயணிகளுமே இவ்வாறு தாக்கப்பட்டனர்.

இராணுவத்துடன் பொலிசாரும் இந் நடவடிக்கையில் நேற்று முன்தினம் ஈடுபட்டனர்.

இராணுவ, பொலிசாரின் கொடூரமான தாக்குதலுக்குள்ளான அப்பாவி பயணிகளில் பலர் வவுனியா, அநுராதபுரம் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுகின்றனர் என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பூநகரி நாகதேவன் துறை தளங்களை இழந்த இராணுவத்தினர் பெரும்சீற்றத்துடன் காணப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## அரைமணி சுணங்கியிருப்பின் நாசம் விளைந்திருக்கும்

### யாழ். செயலக அதிகாரி

(யாழ்ப்பாணம்)

''அரைமணி நேரத்திற்கு முன்னதாக குண்டுவீச்சு நடைபெற்றதினால் சுமார் 300இற்கும் மேற்பட்ட உயிர்கள் காப்பாற்றப்பட்டன''.

இவ்வாறு நேற்று முன்தினம் காலை8 30மணியளவில்யாழ். செயலகத்தின்மீது சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான சுப்பர்சொனிக் குண்டு வீச்சு விமானம் நடாத்திய அகோர குண்டுவீச்சில் மயிரிழையில் உயிர்தப்பிய யாழ். செயலக உயர்அதிகாரி ஒருவர் நமது நிருபரிற்குதெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; காலையில் செயலகத்தில் எனது அலுவலகத்தில் நிறைய வேலை இருந்ததினால் 8.30 மணிக்கு முன்னதாக செயலகத்திற்கு வந்தேன். ஏனைய சிலரும் அவ்வாறு வந்திருந்தனர். இவ்வேளைதான் குண்டு வீச்சு நடைபெற்றது. இதில் எங்களிற்சிலர் காயமடைந்தனர். ஏனையோர் 8.30இற்கு முன்னர் வராமையினால் பாரிய உயிர்ச்சேதம் ஏற்படுவது தவிர்க்கப்பட்டது என தெரிவித்தார். (பா),(நி)

இன்று அவனைக் காணவில்லையே
ஏனவன் வேலைக்கு வரவில்லை
மானஸ்த்தன் போலும், மறைந்துவிட்டான்.
நேற்றுவரை
நாகதேவன்துறை
படுகொலைப் படகுகளின் துறைமுகம்
தமிழரின் குருதிபடிந்த வெட்டரிவாள்கள்
இங்கேதான் சாணை பிடிக்கப்பட்டன.
கடாரம் வென்ற இனத்தின் முதுகில்
காற்றுக் கொதுங்கிய கால்கள் படுவதா?
வன்னியன் மண்ணில் அந்நியன் வந்து
வரலாறெழுதிட எப்படி முடியும்?
எப்படி முடியும்?
எப்படி முடியும்?
எங்களின் மண்ணிதை எப்படிப் பொறுக்கும்?

"பூநகரிப் பாதையின் போக்குவரத்துக்கு
பேச்சுவார்த்தை'' என்றவனே!
''பிரபாகரனை மேசைக்கு அழைத்து
பேசுவோம்'' என்றவனே!
யார்? யாருடன் பேசுவது?
எங்கள் தலைவனின் பெயரைச் சொல்ல
எப்படி உனக்குத் துணிச்சல் வந்தது?

விடிவுக்காக எழுந்த சூரியனை
விளையாட்டுப் பொம்மை என்றா நினைத்தாய்?
நிலத்தை உடைத்துப் பீறும் நெருப்பாற்றை
கைகளால் பொத்தலாம் என்றா நினைத்தாய்?
நேற்று
நள்ளிரவு
நிலவு அற்ற வானத்தில்
மழை மேகம் மட்டும் சதிராடிய நேரத்தில்
உன்னைப் போல்
ஈசல்கள் மட்டும் பறந்து கொண்டிருந்தன.
நடக்கப் போவது அறியாமல்
உன் தளபதிகளைப் போல.....
சில் வண்டுகள் மட்டும் பாடிக் கொண்டிருந்தன.
அறிந்துகொண்ட ''தவளைகள்'' மட்டும்
அலறிக் கொண்டிருந்தன.
உன்னைநோக்கி......
உன் முகாமின் திசை பார்த்து
எங்கள் "பிள்ளைகள்'' நகரத் தொடங்கினர்.
புயலாகப் புகுந்த புலிகளைக்கண்டு
பூநகரி புல்லரித்துக் கொண்டது
பிரபாகரனை பேச்சுக்கழைப்பேன் என்றவனே!
போட்டது போட்டபடி எங்கே ஓடினாய்?
நாகதேவன் துறையில் கட்டியிருந்த
வேகப்படகுகளையும் விட்டுவிட்டு
எங்கே ஓடினாய்?
இது தமிழன் பூமி
இது எங்கள் தலைவனின் காலம்
இது எமக்கு வெற்றிகள் வேர்விடும் வேளை
பூநகரி மட்டுமா உன்னை விட்டுப் போனது?
இல்லை.
அடுத்தடுத்து நீ இழக்கப்போகும்
அனைத்தினதும் ஆணிவேர்களுமல்லவா
அறுபட்டுப் போனது.
பூநகரிப் பாதைக்காக பேச நினைத்தவனே
இனிப் பேசுவோம் வா
தமிழீழத்தின் எல்லைகள் எது? என்று
பேசிமுடிக்கலாம்
வருக,

# தேவாலயம் மீது தாக்குதல் இறந்தோர் விபரம்

[நமது நிருபர்]

சென்யேம்ஸ் தேவாலயத்தின் மீது சுப்பர் சொனிக் விமானம் மேற்கொண்ட குண்டுத்தாக்குதலுக்கு இலக்காகி ஆலயத்தினுள் பலியான ஒன்பது பேருடைய பெயர் விபரங்கள் வருமாறு சென்யேம்ஸ் வீதி குருநகரை சேர்ந்தவர்களான யோன் வெண்ணிலா [வயது 27], சிங்கராயர் கனோஜி [வயது8], குருசு அக்கினேஸ் [வயது 83], 7ஆம் குறுக்குத்தெருவை சேர்ந்த தார்சியஸ் மேரி யெயசீலி (வயது 55), 26, தண்ணீர் தாங்கி குருநகரை சேர்ந்த மதுரநாயகம் சிந்துஜா [வயது 2], 104 பிரதான வீதியை சேர்ந்தயோன்சேவியர் வயது 53), 12 சென்யேம்ஸ்வீதியை சேர்ந்த கபிரியேல் அன்ரன் [வயது 48], சென்யேம்ஸ்ஆலயத்தை சேர்ந்த தோமஸ் பெனடிக்ற், 9/3மத்தியகிழக்கு வீதியை சேர்ந்த லோரி அன்ரன் புஸ்பலீலா [வயது 43] ஆகியு வர்களே மரணமானவர்களாவர்.

மேற்படி குண்டுத்தாக்குதலின்போது தேவாலயத்தினுள் காயமடைந்தவர்களின்பெயர் விபரம்வருமாறு மதுரநாயகம் பேஜினி[வயது28], மேரிநிந்துஜா[வயது 2), அருணஉதயன் [வயது 2மாதம்], சிங்கராயர் பிலோமினா (மரணமடைந்த சிறுவன் கனோஜியின்தாயார்] சிங்கராயர் நவரோஜி [வயது 7]மற்றும் குருசுப்பிள்ளை அருள்நாயகி (இவர் [சம்பவத்தில் பலியான அக்கினேஸின் மகளாவார்) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

[சி, நி, 1]


தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயம்

**நம்பிக்கை இல்லம்**

**[HOUSE OF HOPE]**

மேற்படி இல்லத்திற்கு உடல் ஊனமுற்ற (Physically Disabled) ஐந்து (5) வயதிற்கும் பதினாறு (16) வயதிற்கும் இடைப்பட்ட சிறுவர், சிறுமிகள் சேர்த்துக் கொள்ளப்பட இருக்கின்றனர். இதற்கு தகுதியுள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

விண்ணப்பதாரிகள் குடும்ப விபரத்துடன் திருமதி P. கதிர்காமர் அவர்களை இறையியல் கல்லூரி, மருதனார்மடம், சுன்னாகம் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

செயற்திட்ட பணிப்பாளர்

ஆதீனர் காரியாலயம், தென்னிந்திய திருச்சபை

வட்டுக்கோட்டை (சி-7918)



**முக்கிய அறிவித்தல்**

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள ரதிவாச் வேக்ஸ் அன்ட் ஸ்ரோர்ஸ் ஸ்தாபனத்தில் 1992ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்பாக திருத்தக் கொடுத்த மணிக்கூடுகளை திரும்ப எடுக்காத வாடிக்கையாளர்கள் இத்தகவலைக் கருத்திற் கொண்டு இந்த அறிவித்தல் கண்ட ஒரு மாதத்திற்குள் ரிசீற்றுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளும்படி தயவுடன் கேட்டுக் கொள்ளுகிறோம். அதற்குப் பின் நாங்கள் எந்தவிதத்திலும் பொறுப்பாளிகள் இல்லை.

- நிர்வாகத்தினர்

[சி-7897]



பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி விரிவுரைகள்

கல்வியாண்டு 1994/95


# பாதுகாப்பு வலயத்தினுள் சுப்பர் சொனிக் தாக்குதல்

## யாழ். வைத்தியசாலை பலத்த சேதம்

(நமது நிருபர்)

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான சுப்பர் சொனிக் குண்டு வீச்சு விமானங்கள் நேற்று பிற்பகல் 2 30 மணியளவில் யாழ் நகர்ப் பகுதியிலும் யாழ் போதனா வைத்தியசாலை பாதுகாப்பு வலயப் பகுதியிலும் மேற்கொண்ட அகோரகுண்டுவீச்சு மற்றும் றொக்கட்த் தாக்குதலினாலும் ஒரு சிறுவன் பலியானார் ஆறிற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். வீசப்பட்ட குண்டு ஆஸ்பத்திரிக்கு முன் வீழ்ந்தது றொக்கட்டுகள் யாழ்நகர் கோணாந்தோட்டம் சிவன் பண்ணை வீதி ஆகிய இடங்களில் வீழ்ந்து வெடித்தன.

யாழ் போதனாவைத்தியசாலைக்கு முன்பாக வீசப்பட்ட குண்டு வீழ்ந்து வெடித்ததில் யாழ். போதனாவைத்தியசாலை சேதமடைந்தது. அங்குகடமையில் இருந்த இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் காயமடைந்தனர். அத்துடன் அப்பகுதியில் அமைந்திருந்த புற்றுநோய் சிகிச்சை நிலையமும் சேதமடைந்தது. மேலும் ஊர் காவற்றுறை ப.நோ.கூ.சகஞ்சியமும் அந்தோனிப்பிள்ளை ஹென்றி என்பவரின் கடையும் மற்றும் பல கடைகளும் சேதமடைந்தன.

குண்டு வீச்சின் சிதறல்கள் யாவும் யாழ் போதனாவைத்தியசாலையின் பாதுகாப்பு வலயத்துள் சிதறிக் காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது

இதனை அடுத்து யாழ்நகர் மற்றும் கோணாந் தோட்டம் ஆகிய பகுதிகளை நோக்கி றொக்கட் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது.

இதில் சிவன்பண்ணைவீதி மீது மேற்கொள்ளப்பட்ட றொக்கட் தாக்குதலினால் அருமைநாயகம் சதீஸ் (வயது 5 சிவன்-பண்ணை றோட்) என்னும் சிறுவன் பலியானார் மேலும் குண்டு மற்றும் றொக்கட் தாக்குதலினால் காயமடைந்தோர் விபரம் வருமாறு அந்தோனிப்பிள்ளை கென்ரி (வயது 46), இ சிறிஸ்காந்தராசா (வயது 39), சி ஜெயராணி (வயது 31), ஆனந்தம் அன்ரன் யூட் (வயது 24 பாதுகாப்புஉத்தியோகஸ்தர்), எம். முரளிதரன் (வயது 24, பாதுகாப்பு உத்தியோகஸ்தர்) மற்றும் ஒரு பெண்ணும் காயமடைந்துள்ளார். இவர்கள் நேற்று யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். [பா] [சி]

# யாழ். வைத்தியசாலை கட்டடங்கள் பலத்த சேதம்

## நோயாளர்கள் வெளியேறினர்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பு வலயத்தினுள் சுப்பர் சொனிக் விமானம் மேற்கொண்ட குண்டுத்தாக்குதலால் யாழ். போதனா மருத்துவமனை கட்டடங்கள்பல சேதமடைந்தன. யன்னல் கண்ணாடிகள் வெடித்துச் சிதறின. வெளிநோயாளர் பகுதியில் பூட்டிக் கிடந்த நோயாளிகளைப் பார்வையிடும் அறைக் கதவுகளின் பூட்டுக்கள் தெறித்து திறந்து கிடந்ததை காணமுடிந்தது.

மேற்படி தாக்குதலினால் சிறுவர் மருத்துவப் பிரிவு வார்ட்டுகளின் யன்னல் கண்ணாடிகள் வெடித்துச்சிதறின. இதில் 12ஆம்வார்ட்டில்உள்ள யன்னல் கண்ணாடிகள் உடைந்து உள்ளேயிருந்த படுக்கைகளின் மீது வீழ்ந்தன முன்வரே தமது பிள்ளைகளை தூக்கிக்கொண்டு வார்ட்டுகளுக் கிடையிலான நடைபாதைக்கு எல்லோரும்சென்று பாதுகாப்பை தேடி ஓடியிருந்ததால் எவரும் காயமடையவில்லை.

இதேவேளை மகப்பேற்று வார்டடு யன்னல், கதவுக் கண்ணாடிகளும் வெடித்து சிதறியதில் அவ்வார்ட்டில் இருந்தோரும் வெளியேறி தமது வீடுகளுக்கு சென்றுவிட்டனர். 12ஆம் வார்ட்டில் உள்ள நோயாளி சிறுவர்களுள் ஒரு சிறுவனை தவிர ஏனையோர் மருத்துவமனையை விட்டு பீதியினால் வெளியேறி விட்டனர். இத் தாக்குதலுக்கு மருத்துவமனை வார்ட்டுகளிலுள்ள அநேகமான குழல் மின் குமிழ்களும் வெடித்துச் சிதறின. கண்கிளினிக் மற்றும் மெடிக்கல் கிளினிக் கட்டடகூரையின் ஓடுகள் சிதறுண்டு போய் உள்ளன. இதில் செஞ்சிலுவை சின்னம் பொறிக்கப்பட்டிருந்த ஓடுகளும் விலகி விழுந்துள்ளன.

இக் குண்டுத் தாக்குதலால் யாழ் போதனா மருத்துவமனைக்கு ஏற்பட்ட சேதத்தைச் சர்வதேச செஞ்சிலுவை சங்க யாழ் வதிவிட உதவி பிரதிநிதியானசெல்வி சன்றின் பார்வையிட்டார்.

# நந்தாவிலில் குண்டுவீச்சு 10 பொதுமக்கள் படுகாயம்

# புலிகள் எடுத்துச்சென்ற ஆயுதங்களால் பேராபத்து

## டெய்லி நியூஸ் ஆசிரியர்

பூநகரி இராணுவ, கடற்படை முகாம்களை விடுதலைப் புலிகள் தாக்கி பெருமளவு படையினரைக் கொன்றதைவிட அங்கு அவர்களால் எடுத்துச் செல்லப்பட்ட ஆயுதங்களைக்கொண்டு இனி என்ன செய்வார்கள் என்பதே மிகவும் அபாயகரமானது என டெய்லி நியூஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பூநகரி முகாமை விடுதலைப் புலிகள் கைப்பற்றி பெருமளவு இராணுவத்தினரைக் கொன்றதுடன் பல கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான கனரக இராணுவ தளபாடங்களைக் கைப்பற்றியமை தெரிந்ததே.

மேற்படி முகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதையோ, பெருமளவு இராணுவத்தினரைக்கொன்றதையோ குறைத்து மதிப்பிட முடியாவிட்டாலும் அங்கு அவர்களால் எடுத்துச்செல்லப்பட்ட கனரக போர் ஆயுதங்களைக்கொண்டு புலிகள் எதிர்காலத்தில் நடாத்தும் தாக்குதல்கள் இதைவிடப் பன்மடங்கு அதிகமாக இருக்கும். இது அரசிற்கு மிகவும் ஆபத்தான ஒன்றாகவே அமையப்போகின்றது எனவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

## கைப்பற்றிய ஆயுதங்களுடன்

# வெளியேறிச் செல்வது புலிகளின் தந்திரோபாயம்

முகாம்களைத் தாக்கி ஆயுதங்களைக் கைப்பற்றிக் கொண்டு அங்கிருந்து பின் வாங்கிச் செல்வதே விடுதலைப் புலிகளின் வழக்கமான யுதத தந்திரோபாயம் என பி. பி. ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

பூநகரிஇராணுவ கடற்படை முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டு அவற்றை அழித்ததுடன் பெருமளவு ஆயுதங்களை கைப்பற்றியமை தெரிந்ததே.

இத்தாக்குதலின் போது தப்பியோடி அருகிலுள்ளகாட்டுப் பகுதியில் தலைமறைவாக இருக்கும் இராணுவத்தினரை மீட்டெடுக்க நேற்றைய தினம் சிறிலங்கா கடற்படை கப்பல்களில் இராணுவத்தினரை தரையிறக்கிய போது விடுதலைப் புலிகளால் எதுவித எதிர்த்தாக்குதல்களும் நடாத்தப்படவில்லை என சிறிலங்கா இராணுவ பேச்சாளர் தெரிவித்ததை குறிப்பிட்டே பி. பி ஸி மேற்கண்டவாறு தனது கருத்தை வெளியிட்டதுடன் சில சமயங்களில் புலிகள் படையினரை தரையிறங்க விட்டு இவர்கள் மீது தாக்குதல் நடாத்த திட்டமிட்டிருக்கலாம் எனவும் தெரிவித்தது. செய்தியாளர், அதிகாரிகளின் முகங்களில் இதுவரை படிந்திருந்த கவலை ரேகைகள் தற்போது கலைந்து கொண்டிருப்பதை காணக்கூடியதாக உள்ளது என்றார் மேலும் கடந்த இரண்டு நாட்களாக பொறியில் சிக்கிய எலி போன்ற நிலையிலேயே பூநகரியை அண்டிய பகுதிகளில் இராணுவத்தினர் உள்ளனர். இவர்கள் தமதுஉயிரைக் காக்க போராடிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களை சுற்றிவளைத்து போரிடும் விடுதலைப் புலிகளோ உயிரைத் துச்சமென மதித்திடுபவர்கள் என்பதை குறிப்பிடாமல் இருக்க முடியாது எனவும் பி. பி ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

# பாதுகாப்பு வலயத்துள் இரவு எறிகணை வீச்சு

யாழ். போதனா மருந்துவமனையின் பாதுகாப்பு வலயத்தின் மீது சிறிலங்கா இராணுவத்தினர் ஆட்லறி எறிகணைத் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

நேற்று இரவு 10-00 மணியளவில்மண்டைதீவில்இருந்து ஏவப்பட்ட எறிகணைகள் மேற்படி பாதுகாப்பு வலையதென்பகுதியில் வீழ்ந்து வெடித்தன.

இத்தாக்குதலால் அசோக்கா ஹோட்டலுக்கு முன்பாகவுள்ள குடியிருப்புக்கள் சேதமடைந்தன. அத்துடன் மேலும் சில எறிகணைகள் நகரக் கரையோரப்பகுதிகளி

பிரபாகரனின்

அரசியல் கட்சிகள் முயல்கின்றன சட்டவிரோத ஆயுதங்

## முக்கிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள ரதி வாச் வேக்ஸ் அன்ட் ஸ்ரோர்ஸ் ஸ்தாபனத்தில் 1992ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்பாக திருத்தக் கொடுத்த மணிக்கூடுகளை திரும்ப எடுக்காத வாடிக்கையாளர்கள் இத்தகவலைக் கருத்திற் கொண்டு இந்த அறிவித்தல் கண்ட ஒரு மாதத்திற்குள் ரிசீற்றுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளும்படி தயவுடன் கேட்டுக் கொள்ளுகிறோம். அதற்குப் பின் நாங்கள் எந்தவிதத்திலும் பொறுப்பாளிகள் இல்லை.

\- நிர்வாகத்தினர்

[சி-7897]


**பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி விரிவுரைகள்**

## கல்வியாண்டு 1994/95

*பின்வரும் பாடநெறிக்கான விரிவுரைகள்*

**5-12-93 இல் ஆரம்பமாகின்றன**

★ கலைமாணி B. A.

★ விஞ்ஞானமாணி B. Sc. (புள்ளி விபரவியல்)

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம். 1993 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க. பொ. த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி முடிவுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி:- 2-12-1993**

விண்ணப்பப் படிவத்தினையும் விபரத் திரட்டினையும் பெறவிரும்புவோர் ரூபா 10 பெறுமதியான முத்திரையை அனுப்பி நேரிலோ அல்லது தபால் மூலமோ பெற்றுக் கொள்ளலாம்.

விபரங்களுக்கு:
உதவிப் பதிவாளர்
**பட்டப்படிப்புகள் கல்லூரி**
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வெளிவாரிப் பட்டப் படிப்புகளுக்கென தனித்துவமாக கடந்த 15 வருடங்களாக இயங்கும் ஒரேயொருநிறுவனம் யாழ் நகரில் இதுவே.

(சி-7819)



**யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்**

*The Super Cops*

[கராட்டி]

**தினசரி பிற்பகல் 4-00 மணி, மாலை 6-00 மணி**
**சனி, ஞாயிறு காலை 10-30, பிற்பகல் 2-30, 4-00, மாலை 6.00 மணி**


டடங்கள்பல சேதமடைந்தன. யன்னல் கண்ணாடிகள் வெடித்துச் சிதறின. வெளிநோயாளர் பகுதியில் பூட்டிக் கிடந்த நோயாளிகளைப் பார்வையிடும் அறைக் கதவுகளின் பூட்டுக்கள் தெறித்து திறந்து கிடந்ததை காணமுடிந்தது.

மேற்படி தாக்குதலினால் சிறுவர் மருத்துவப் பிரிவு வார்ட்டுகளின் யன்னல் கண்ணாடிகள் வெடித்துச்சிதறின. இதில் 12ஆம்வார்ட்டில் உள்ள பாதைக்கு எல்லோரும் சென்று பாதுகாப்பை தேடி ஓடியிருந்ததால் எவரும் காயமடையவில்லை.

இதேவேளை மகப்பேற்று வார்ட்டு யன்னல், கதவுக் கண்ணாடிகளும் வெடித்து சிதறியதில் அவ்வார்ட்டில் இருந்தோரும் வெளியேறி தமது வீடுகளுக்கு சென்றுவிட்டனர். 12ஆம் வார்ட்டில் உள்ள நோயாளி சிறுவர்களுள் ஒரு சிறுவனை தவிர ஏனையோர் மருத்துவ விக்மற்றும் மெடிக்கல் ஒளி விக் கட்டடகூரையின் ஓடுகள் சிதறுண்டு போய் உள்ளன. இதில் செஞ்சிலுவை சின்னம் பொறிக்கப்பட்டிருந்த ஓடுகளும் விலகி விழுந்துள்ளன.

இக் குண்டுத் தாக்குதலால் யாழ் போதனா மருத்துவ மனைக்கு ஏற்பட்ட சேதத்தைச் சர்வதேச செஞ்சிலுவை சங்க யாழ் வதிவிட உதவி பிரதிநிதியானசெல்வி சன்றின் பார்வையிட்டார்.

# நந்தாவிலில் குண்டுவீச்சு 10 பொதுமக்கள் படுகாயம்

(நமது நிருபர்கள்)

சிறிலங்கா விமானப்படைக்கு சொந்தமான சுப்பர் சொனிக் விமானம் நேற்று மாலை 2.30 மணியளவில் கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவில் பகுதியில் நடத்திய தாக்குதலில் ஒரே குடும்பத்தைச்சேர்ந்த எட்டுப்பேர் உட்பட பத்துப்பேர் படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நண்பகல் நேரத்தில் வானில் வட்டமிட்ட இவ் விமானம் ஒரே தடவையில் இரண்டு குண்டுகளை வீசியது. குண்டு வீச்சு விமானத்தின்சத்தத்தை கேட்ட வீட்டார் வீட்டை விட்டு வெளியேற முற்படுகையில குண்டு வீழ்ந்து வெடித்ததில் இவர்கள் காயம் அடைந்தனர்.

செல்லையா சேனாதிராசா (70), இவரின் கால் துண்டிக்கப்பட்டது. இவரின் மனைவி சேனாதிராசா செல்லக்கண்டு (64), இவர்களின் மகன் சேனாதிராசா செல்வநாயகம் (41), இவரின் மருமகள் மற்றும் பிள்ளைகளான ஆறுமுகம் பாலசுந்தரேஸ்வரி (37), ஆறுமுகம் இனியா (10), ஆறுமுகம தனஞ்செயன் (10), ஆறுமுகம் தனஜன் (4), ஆறுமுகம் ஐஸ்வரியா (ஒன்றரை வயது) ஜீ றோசலின் (40), செல்வம் ஆகியோரே காயமடைந்தவர்கள்.

இத்துடன் இப்பகுதியைச் சேர்ந்த பத்துக்கும் மேற்பட்ட வீடுகள் பலத்த சேதமடைந்தன.

குண்டு வீச்சு நடாத்திய இச் சுப்பர் சொனிக் விமானத்தின் மீது விடுதலைப் புலிகள் விமான எதிர்ப்புத் துப்பாக்கி மூலம் எதிர்த்தாக்குதல் நடாத்தினர். (09),(11),(நி)

### பூநகரி

நோக்கமாகக் கொண்டிருந்தனர்

இந்நிலையில், விடுதலைப் புலிகளின் இத்தாக்குதல்பூரண வெற்றியளித்ததைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் அப் பகுதியிலிருந்து வெளியேறும் நடவடிக்கையை நேற்றுக் காலை ஆரம்பித்தனர்.

விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இத்தாக்குதலில் பல நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு பெரும் எண்ணிக்கையினர் படுகாயமடைந்துமுள்ளனர். அதேவேளை, பல கோடி ரூபா பெறுமதிமிக்க நவீன ரக ஆயுதங்களையும் கைப்பற்றினர்.

1983 ஆம் ஆண்டு தமிழ்த் தேசிய இன விடுதலைப் போராட்டம்ஆயுதப்போராட்டமாகக் கூர்மை அடைந்த பின்னர் சிறிலங்கா அரசு சந்தித்த மிகப்பெரிய தோல்வி இதுவாகும். இதுவரை ஒரு தாக்குதலில் சிறிலங்கா இராணுவம் இவ்வளவு பெருந்தொகையில் உயிரிழப்பைச் சந்திக்கவில்லை என்பதோடு, பெருந்தொகை இராணுவத் தளபாடங்களையும் இழந்ததில்லை.

### யாகப்பர்

பகல் சேமக்காலைக்கு எடுத்து செல்லப்பட்டு புதைக்கப்பட்டன.

இத்தாக்குதலின்போது இவ் ஆலயத்தில் நடுப்பகுதியிலும், உள்வளவிலும் இரு குண்டுகள் வீசப்பட்டிருந்தன ஆலயத்தினுள் இருந்த தேவமாதா படம், புனித யாகப்பர் சுருபம் அதனுடன் சேர்ந்த கூடு, பூசைப்பலி ஒப்புக் கொடுக்கும் பீடப் பின்புறம் ஆலயத்தின் நடுக் கூரைகள் ஆகியவை முற்றாகசேதமடைந்துள்ளன.

அத்துடன் புனித யாகப்பர் ஆலயத்தின் பாரிய தூண்கள் மூன்றும் விழுந்துள்ளன. ஆலயத்தின் வெளிவிறாந்தை அரைவாசிக்குமேல்சிதைவடைந்துள்ளது. ஆலயத்தின் மேல் டோமில் உட்புறமும் ஆலயத்தின் வலப்பக்க இடப்புற பின்பக்க தூண்களும் விழுந்த நிலையில் காட்சியளிக்கின்றன.

ஆலய வளவினுள் பங்குத் தந்தையின் மனை முழுவதும் சேதமடைந்துள்ளது. அத்துடன் புனித யாகப்பர் மண்டபமும், குருநகர் பகுதிமக்களுக்கு குடிநீரை வழங்கும் ஆலய வளவில் அமைக்கப்பட்டுள்ள தண்ணீர் தாங்கியும் சேதமடைந்துள்ளன. ஆலய வளவிலுள்ள புனித யாகப்பர்மகளிர் மகா வித்தியாலயமும் சேதமடைந்துள்ளது. (17)

## பரீட்சை பிற்போடப்பட்டது

காரைநகர் மணிவாசகர் சபையினரால் இன்று நடத்தப்படவிருந்த சமயபாடப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகஅறிவிக்கப்பட்டுள்ளது.

## பிற்போடப்பட்டது

இன்று நடைபெறவிருந்த செங்கை ஆழியானின் யாழ்ப்பாணத்து இராத்திரிகள் சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா பிற்போடப்பட்டுள்ளது என யாழ் இலக்கிய வட்டம் அறிவித்துள்ளது.

## ஊரடங்கு

வடமாகாணத்தில் ஊரடங்கு உத்தரவு மறுஅறிவித்தல் வரை தொடர்ந்து அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஊரடங்குஉத்தரவு நேற்றுமுன்தினம்மாலை 5 00 மணிமுதல் அமுலுக்கு வந்தது தெரிந்ததே.

### 600 படையினர் [illegible]

வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இதுவரை காலமும் இராணுவம் சந்தித்திராத புலிகள் நடாத்திய மிகமோசமான தாக்குதல் இதுவாகும் என அவர் அறிவித்தார்.

களில் இராணுவத்தினரை தரையிறக்கிய போது விடுதலைப் புலிகளால் எதுவித எதிர்த்தாக்குதல்களும் நடாத்தப்படவில்லை என சிறிலங்கா இராணுவ பேச்சாளர் தெரி[illegible]... போரிடும் விடுதலைப் புலிகளோ உயிரைத் துச்சமென மதித்திடுபவர்கள் என்பதை குறிப்பிடாமல் இருக்க முடியாது எனவும் பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

## பாதுகாப்பு வலயத்துள் இரவு எறிகணை வீச்சு

யாழ். போதனா மருத்துவ மனையின் பாதுகாப்பு வலயத்தின் மீது சிறிலங்கா இராணுவத்தினர் ஆட்லறி எறிகணைத் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

நேற்று இரவு 10-00 மணியளவில்மண்டைதீவில்இருந்து ஏவப்பட்ட எறிகணைகள் மேற்படி பாதுகாப்பு வலையதென்பகுதியில் வீழ்ந்து வெடித்தன.

இத்தாக்குதலால் அசோக்கா ஹோட்டலுக்கு முன்பாகவுள்ள குடியிருப்புக்கள் சேதமடைந்தன. அத்துடன் மேலும் சில எறிகணைகள் நகரக் கரையோரப்பகுதிகளிலும் வீழ்ந்து வெடித்தன இதனையடுத்து கரையோர பகுதி மக்கள் பெருமளவில் வெளியேறி வருகின்றனர்.

### பிரபாகரனின்

அரசியல் கட்சிகள் முயல்கின்றன சட்டவிரோத ஆயுதங்களை களைவது இராணுவத்தின் வேலை அதேவேளை அரசியல் தீர்வு காணவேண்டியது அரசாங்கத்தின் கடமை

சமஷ்டி என்றால் என்ன? அதிகாரப் பரவலாக்கம் என்றால் என்ன? என்பது குறித்து மக்களுக்கு விளக்க வேண்டும்

'இன்றைய நிலைதொடருமானால் சில வாரங்களில் கொழும்பில் விடுதலைப் புலிகளின் படையணிகளை சந்திக்க வேண்டி ஏற்படும் இன்று யுத்தத்தின்போக்கைப் பார்த்தால் இந்நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்பட ஏதுமில்லை'' என்றார்.

### ஆயர் பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான சுப்பர் சொனிக் போர் விமானம் நேற்றுமுன்தினம் யாழ் செயலகத்தில் வீசிய குண்டினால் காயமடைந்த யாழ் அரசாங்க அதிபரை யாழ் ஆயர்தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை சென்று பார்வையிட்டார்.

## வீரச்சாவு

**வீரவேங்கை கலைஞன் (ரகீம்)**
**சுப்பிரமணியம் சத்தியசீலன்**
**6ஆம் வட்டாரம், மயிலிட்டி.**

உறவினர் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

குடும்பத்தார்

(6574)

## மரண அறிவித்தல்

**கந்தையா கேதீஸ்வரன்**

**(ஈசன்)**

கந்தையா கேதீஸ்வரன் (செந்தமிழ்ச் செல்வன், கேதீஸ்) பூநகரி முகாம் தகர்ப்பில் வீரச்சாவடைந்தார். இவர் கீரிமலையைச் சேர்ந்த திரு கந்தையா (யாழ் போதனா வைத்தியசாலை, நலன்புரிச்சங்கம்), தவமணி தேவி அவர்களின் அன்பு மகனும், சிறி (படப்பிடிப்பாளர்), விக்கினேஸ்வரி, பகிரதன், றஜிகரன், விஜிதா (ஆணைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலை), ஜெகதீஸ்வரி (வைத்தீஸ்வராக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தற்போதைய முகவரி:
22/2, மாவடி றோட்,
வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சிறி
(சகோதரன்)

(6575)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் கேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.